கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 146 | 01-12-2025 | திங்கள் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 146 | 01-12-2025 | Monday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## பரபரப்பான அரசியல் சூழலில் பாராளுமன்றம் இன்று கூடுகிறது

புதுடெல்லி: டிச.1–

பரபரப்பான அரசியல் சூழலில் பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று (1ந்தேதி) தொடங்குகிறது. வருகிற 19ந் தேதி வரை இந்த கூட்டம் நடைபெறுகிறது. விடுமுறை நாட்கள் நீங்கலாக 15 அமர்வுகள் இந்த கூட்டத்தொடரில் இடம்பெற உள்ளன.12 மாநிலங்களில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.), டெல்லி குண்டு வெடிப்பு, வாக்கு திருட்டு, டெல்லி காற்று மாசு, வேலைவாய்ப்பின்மை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து அவையில் விவாதிக்க காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசு விவாதிக்க மறுக்கும் என்பதால் இரு அவைகளிலும் கடும் அமளி ஏற்படும்.தி.மு.க, திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாடி உள்ளிட்ட கட்சிகள் வாக்காளர் தீவிர திருத்தம் தொடர்பான பிரச்சனையை கிளப்புவார்கள்.கடந்த ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 21 வரை நடை பெற்ற மழைக்கால கூட்டத் தொட ரில் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், ஆபரேஷன் சிந்தூர், பஹல்காம் தாக்குதல் உள்ளிட்ட விவகாரங்களுக்கான விவாதம் குறித்த எதிர்க்கட்சிகளின் அமளியால் பாதிக்கப்பட்டது. மழைக்கால கூட்டத்தொட ரில் மக்களவையின் செயல்பாடு 31 சதவீதமாகவும், மேல் சபையின் செயல்பாடு 39 சதவீதமாகவும் இருந்தது. குளிர்கால கூட்டத்தொடரில் சிவில் அணுசக்தி துறையில் தனியாருக்கு அனுமதி வழங்குவது, இந்திய உயர் கல்வி ஆணையம் அமைப் பது, பெருநிறுவன சட்டம் மற்றும் பங்குச்சந்தை உள்ளிட்ட 10 மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.10 மசோதாக்களில் 4 நிதித்துறை தொடர்புடையவை, 2 சட்டம் மற்றும் நீதித்துறை தொடர்புடையவை. கல்வி, எரிசக்தி, போக்குவரத்து துறை, உள்துறை ஆகியவை தொடர்பான தலா ஒரு மசோதாவும் அடங்கும்.வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு கொண்டாடப்படுவதால் அதன் வரலாறு குறித்த விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பாடலில் இருந்து முக்கிய வரிகள் கடந்த 1937ம் ஆண்டு நீக்கப்பட்டதே இந்தியாவின் பிரிவினைக்கு காரணம் என்று பிரதமர் மோடி குற்றம்சாட்டி இருந்தார். வந்தே மாதரம் பாடலின் வரலாறு, சுதந்திர இயக்கத்தில் அதன் பங்கு குறித்து இளைஞர்களுக்கு நினைவூட்டுவதற்காக விவாதம் நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.பாராளுமன்ற கூட்டத்தில் எந்த பிரச்சனை குறித்தும் விவாதிக்க தயார் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஒருமித்த கருத்துடன் அவையை சுமூகமாக நடத்துவதற்கு வேண்டுகோள் விடுக்க அனைத்து கட்சி கூட்டத்தை பாராளுமன்ற விவகாரத்துறை மந்திரி கிரண் ரிஜிஜு கூட்டியுள்ளார்.",

## எஸ்.ஐ.ஆர். கணக்கீட்டு படிவங்களை சமர்ப்பிக்க டிச.11ம் தேதி வரை கால அவகாசம் நீட்டிப்பு: தேர்தல் ஆணையம்!

டெல்லி: டிச.1–

எஸ்.ஐ.ஆர். கணக்கீட்டு படிவங்களை சமர்ப்பிக்க டிச.11ம் தேதி வரை கால அவகாசம் நீட்டிப்பு என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. டிசம்பர் 4ம் தேதியுடன் அவகாசம் முடியும் நிலையில் டிசம்பர் 11ம் தேதி வரை நீட்டிப்பு. தமிழ்நாடு உள்பட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

'எஸ்.ஐ.ஆர்' படிவங்களை வாக்காளர்கள் பூர்த்தி செய்து, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் (பிஎல்ஓ) ஒப்படைக்கும் பணியில் நிலவும் சவால்கள் மற்றும் கால அவகாசம் போதாது என்ற கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, இந்த முக்கிய முடிவை தேர்தல் ஆணையம் எடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எஸ்.ஐ.ஆர். கணக்கீட்டுப் படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் டிசம்பர் 11, 2025 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. (முன்னதாக, டிசம்பர் 4 வரை மட்டுமே அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.) வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர் இடம்பெறுவதை உறுதி செய்ய, வாக்காளர்கள் உடனடியாக தங்கள் படிவங்களை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் படிவங்களைச் சமர்ப்பிக்காத வாக்காளர்களின் பெயர்கள், வரைவு வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்படும் அபாயம் உள்ளதாக ஏற்கனவே தேர்தல் ஆணையம் எச்சரித்திருந்தது. தற்போது நீட்டிக்கப்பட்டுள்ள அவகாசத்தைப் பயன்படுத்தி,அனைத்து வாக்காளர்களும் தங்கள் விவரங்களைச் சரியாகப் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், கோவா உள்ளிட்ட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நடைபெற்று வருகின்றன.




அமைச்சர் இரா.ராஜேந்திரன் சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி, முயல் நகர் முழு நேர நியாய விலை கடையினை திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.

## டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு துணை நிற்க தயார்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை: டிச.1–

"டிட்வா புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்குத் துணை நிற்க தமிழ்நாடு தயாராக உள்ளது" என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "டிட்வா புயல் காரணமாக நமது அண்டை நாடான இலங்கை பேரழிவைச் சந்தித்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்தும் பல இடங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியும் இலங்கை மக்கள் அவதியுறுகின்றனர்.




இந்த இயற்கைச் சீற்றத்தில் இறந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இலங்கை மக்களின் இப்பெருந்துயரில் தமிழ்நாடும் தமிழ்நாட்டு மக்களும் பங்கெடுக்கிறோம்.

இலங்கையில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளை மீட்க அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு, நேற்று காலை 11:05 மணியளவில் முதற்கட்டமாக 177 பேர் (ஆண்கள் 113, பெண்கள் 60, குழந்தைகள் 4)தமிழ்நாட்டிற்குத் திரும்ப அழைத்து வரப்பட்டுள்ளனர்.

டிட்வா புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு மத்திய அரசின் மூலம் உணவுப் பொருட்கள் மருந்துப் பொருட்கள் உள்ளிட்டவற்றைத் தந்து, அவர்கள் மீண்டெழுந்திட உதவிக்கரம் நீட்டிடத் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது. இதற்காக ஒன்றிய அரசுடன் இணைந்து செயல்பட அதிகாரிகள் குழுவை அமைத்திடத் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

## "அன்புமணியின் அரசியல் பயணம் இதோடு முடிந்து விட்டது..!": ராமதாஸ் ஆவேச பேச்சு

பாமக நிறுவனர் ராமதாஸ் அவரது மகன் அன்புமணி இடையேயான மோதல் தீவிரமடைந்து வருகிறது. இதற்கிடையே, 2026ம் ஆண்டு ஆகஸ்ட் வரை கட்சியின் தலைவராக அன்புமணி தொடர்வார். பாமக சார்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் 'ஏ' மற்றும் 'பி' படிவங்களில் கையெழுத்திடும் அதிகாரமும் அவருக்குத்தான் உள்ளது என தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் அறிவித்தது.




இந்நிலையில், கடலூர் மாவட்டத்தின் ஒருங்கிணைந்த பாமக பொதுக் குழு கூட்டம் வடலூரில் உள்ள தனியார் திருமண மண்டபம் ஒன்றில் நேற்று நடைபெற்றது. பாமக நிறுவனர் ராமதாஸ், செயல் தலைவர் காந்தி ராமதாஸ், பாமக சட்டப்பேரவை கொறடா மற்றும் பாமக இணைப் பொதுச் செயலாளர் அருள் எம்எல்ஏ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் ராமதாஸ் பேசியதாவது: 'எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்னைப் போல் இருப்பான்' என்று எண்ணினேன். ஆனால், எனக்கு ஒரு மகன் பிறந்தார். அவர் என்னிடம் இருந்து என் உயிரை மட்டும்தான் பறிக்கவில்லை. நான் சிந்திய வியர்வை எல்லாவற்றையும் பறித்து விட்டார். இருந்தாலும் என்னிடமிருந்து என் உரிமையை மட்டும் பறிக்க முடியாது.

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு தொடர்பாக டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு வருகிற திங்கள்கிழமை விசாரணைக்கு வரும். உண்மை தான் வெற்றிபெறும். எந்த நீதிமன்றத்திற்கு சென்றாலும் ராமதாஸை வீழ்த்த முடியாது. உச்ச நீதிமன்றம் சென்றாலும் என் உரிமையை பறிக்க முடியாது. நீதிமன்றம் மீது நம்பிக்கை உள்ளது.

46 ஆண்டுகள் 96 ஆயிரம் கிராமங்கள் என் மக்களிடம் சென்று நான் வளர்த்த கட்சியை முழுவதும் அபகரிக்க முயற்சிக்கிறார். அப்படி உழைத்து தான் இந்தக் கட்சியின் தலைவராக ஆகியிருக்கிறேன்; எனக்கு உதவியாக செயல் தலைவராக எனது மகள் ஸ்ரீ காந்தியை நியமித்துள்ளேன்.

கடந்த 28.05.2022 அன்று திருவேற்காட்டில் நடந்த பொதுக்குழு கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்புமணியின் தலைவர் பதவிக்காலம் முடிந்து விட்டது. 'பணம் பத்தும் செய்யும்' என்பார்கள்; என்னுடன் இருந்தவர்களை விலைக்கு வாங்கி விட்டார். இருந்தாலும் ஜெயிக்கப் போவது இந்த ராமதாஸ் தான்.

நான் மக்களிடம் சென்று ஓட்டு கேட்டபோது, 'ஓட்டு ஒன்று போடுங்க; கட்சியின் வளர்ச்சிக்காக ஒரு ரூபாய் நோட்டு ஒன்று கொடுங்க' என்று கேட்டு வளர்த்த கட்சி இது. என்னுடைய உரிமையையும் உழைப்பையும் யாராலும் திருட முடியாது. இது போன்று தானாக விரும்பி வரும் ஒரு கூட்டத்தை உங்களால் கூட்ட முடியுமா?

ஒவ்வொரு கூட்டத்துக்கும் ரூ.25 லட்சத்தை முன்கூட்டியே கொடுத்துதான் உங்களால் கூட்டத்தைக் கூட்ட முடிகிறது. நான் செய்த பெரிய தவறு என்னவென்றால் அன்புமணியை படிக்க வைத்து டாக்டர், மத்திய மந்திரி, கட்சியின் தலைவராக நியமித்ததுதான்.

நான் மருத்துவமனையில் இருந்தபோது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் வந்து நலம் விசாரித்தனர். அன்புமணி மட்டும், கீழே உள்ள மருத்துவரிடம் நலம் விசாரித்துவிட்டு சென்று விட்டார். மக்களை ஏமாற்ற முடியாது. நீதி, நியாயம் வெற்றி பெறும். என் பக்கம் நியாயம் உள்ளது. மக்கள் என்னுடன் உள்ளனர்.

நான் வயிறு எரிந்து சொல்கிறேன்; அன்புமணியின் அரசியல் பயணம் இதோடு முடிந்து விட்டது. இனிமேல்தான், பாட்டாளி மக்கள் கட்சி இன்னும் வளர்ச்சி அடையப் போகிறது.

2026ம் ஆண்டு கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து ஏராளமான சட்டப்பேரவை உறுப்பினர்களை உருவாக்கி, அவர்களில் சிலரை அமைச்சராக உருவாக்குவேன். இதற்கு நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து செயல்பட வேண்டும் என்று ஆவேசமாகப் பேசினார் ராமதாஸ்.

இக்கூட்டத்தில் பேசிய வன்னியர் சங்கத் தலைவர் புதா அருள்மொழி,"முன்பே ராமதாஸால் அறிவிக்கப்பட்டது போல, வரும் டிச. 12ம் தேதி மாவட்டத்தலைநகரங்களில் இடஒதுக்கீடு போராட்டம் நடைபெறும்" என்று தெரிவித்தார்.

## டிட்வா புயலால் 3 பேர் பலி; 57 ஆயிரம் ஹெக்டேர் விளை நிலங்கள் பாதிப்பு: தமிழக அரசு தகவல்

சென்னை: டிச.1–

தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலான்மைத் துறை அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர் ராமசந்திரன் சென்னையில் நேற்று (நவ.30) செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தில் டிட்வா புயல் மழை தொடர்பான சம்பவங்களில் 3 பேர் உயிரிழந்தனர். இருவர் தூத்துக்குடி, தஞ்சாவூர் மாவட்டங்களில் சுவர் இடிந்து விழுந்து இறந்தனர். மயிலாடுதுறையில் 20 வயது இளைஞர் ஒருவர் மின்சாரம் பாய்ந்து உயிரிழந்தார். 149 கால்நடைகள் உயிரிழந்தன.

57 ஆயிரம் ஹெக்டேர் அளவிலான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் நாகப்பட்டினத்தில் மட்டும் 24 ஆயிரம் ஹெக்டேர் விளைநிலங்களும், தஞ்சையில் 15 ஆயிரம் ஹெக்டேர் விளை நிலங்களும், மயிலாடுதுறையில் 8000 ஹெக்டேர் விளைநிலங்களும் வெள்ளத்தில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளன. இதுதவிர டெல்டா மாவட்டங்களில் 234 குடிசைகள் சேதமடைந்துள்ளன.

38 நிவாரண முகாம்கள்: தமிழகத்தில் மழை பாதிப்பு அதிகமுள்ள 9 மாவட்டங்களில் 38 நிவாரண முகாம்கள் ஏற்படுத்தி அதில் 2300 பேரை தங்க வைத்துள்ளோம்.

புயலின் அடுத்தக்கட்ட தாக்கம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் இன்று மதியம் புதிய அறிவிப்பு வெளியிடும். அதன் அடிப்படையில் மாவட்ட நிர்வாகங்கள் மேலும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். பொதுமக்கள் வதந்திகளை நம்பாமல் அரசு சார்பாக வெளியிடப்படும் அறிவிப்புகளை மட்டும் பின்பற்ற வேண்டும்

## கோவை விமான நிலையத்தில் உதயநிதி ஸ்டாலினுக்கு வரவேற்பு




ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள, கோவை விமான நிலையம் வந்திருந்த, தமிழ்நாடு துணை முதலமைச்சர், திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலினை, கோவை விமான நிலையத்தில் ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம் பொன்னாடை அணிவித்து புத்தகம் வழங்கி வரவேற்றார்.

# சாதனை பயணம் தொடர்கிறது..



கோவை,டிச.1–

38.மாவட்டம் சென்னை. தமிழ்நாடு சிறுபான்மை ஆணையம்தில் பதவியேற்று 16 மாதங்கள் முடிந்த நிலையில், வரலாற்று சாதனையாக ஒரு வருட காலத்தில் 38 .மாவட்டங்களில் கலந்தாய்வு கூட்டம் நடத்தி முடித்து விட்டோம் .

இந்த வாய்ப்பை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், துணைத் முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், சிறுபான்மை நல துறை அமைச்சர் எஸ். எம் . நாசர் அவர்களுக்கும் நெஞ் சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு. எங்களை வழிநடத்திய சிறுபான்மை ஆணைய தலைவர் ஜோ. சோ. அருண் அவர்களுக்கும் நன்றி இணை தெரிவித்துக் கொள்கிறோம்.

மற்றும் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் அவர்களுக்கும், ஆணைய உறுப்பினர்கள் ஹாமில்டன் வெல்சன். ஏ ஸ்வர்ண ராஜ். நாகூர் ஏ ஹெச் நஜிமுதீன்.பிரவீன் குமார் டாட்டியா.ராஜேந்திர பிரசாத். ரமீட் கபூர்.எஸ் வசந்த் . அனைத்து உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.என்.ஜெ. முகமது ரஃபி உறுப்பினர், தமிழ்நாடு சிறுபான்மை ஆணையம்.



பொள்ளாச்சி நகராட்சி கந்தசாமி பூங்காவை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக பொள்ளாச்சி சாந்தி மெட்ரிகுலேஷன் பள்ளியின் சார்பாக சுத்தம் செய்யும் பணியை பூமி பூஜையுடன் துவங்கியது. இந்நிகழ்வில் நகர மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன் நகராட்சி ஆணையாளர் குமரன் ஆகியோர் சுத்தம் செய்யும் பணிகளை பார்வையிட்டனர். நிகழ்வில் சாந்தி மெட்ரிகுலேஷன் பள்ளியின் தாளாளர் பாலாஜி அருண்குமார், சாந்தி சிங்காரவேலு, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் நித்தியானந்தன், நகர மன்ற உறுப்பினர் எம்.கே. சாந்தலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சேலத்தில் முதியோர்,மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு தேடி ரேஷன் பொருள்.

சேலம். டிச.1–

தமிழக முதல்வர் தொடங்கிய 'தாயுமானவர் திட்டம்' மூலம், சேலம் மாவட்டத்தில் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ரேஷன் பொருட்கள் இனி அவர்கள் வீடுகளுக்கே சென்று வழங்கப்படுகின்றன.

ஆரம்பத்தில் 92,998 பேர் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தற்போது, 65 முதல் 70 வயதுக்குட்பட்ட முதியவர்கள் உட்பட மேலும் 17,267 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். இதன் மூலம், சேலம் மாவட்டத்தில் மொத்தம் 1,10,265 பேர் (1,06,421 முதியவர்கள் மற்றும் 3,844 மாற்றுத்திறனாளிகள்) மாதந்தோறும் அரிசி, சர்க்கரை, பருப்பு, கோதுமை, பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வீட்டிலேயே பெற்று மகிழ்கின்றனர்.

இந்தத் திட்டம் சேலம் மாவட்டத்தில் 1,207 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, 1,447 வாகனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. மாநகராட்சி/நகராட்சிகளில் 70 ரேஷன் கார்டுகளுக்கும், மலைப்பகுதிகளில் 50 ரேஷன் கார்டுகளுக்கும், கிராமப் பகுதிகளில் 60 ரேஷன் கார்டுகளுக்கும் ஒரு வண்டி என்ற விகிதத்தில் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. டிசம்பர் மாதத்திற்கான ரேஷன் பொருட்கள் வருகிற 2 மற்றும் 3ம் தேதிகளில் பயனாளிகளின் வீடுகளுக்கே சென்று வழங்கப்படும் என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

# தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பரிசுகள்...!



வந்தவாசி, டிச 01:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த கீழ்க்கொடுங்காலூர் கன்னிகாபுரம் கிராமத்தில் சோனிக் தன்னார்வ அமைப்பின் அலுவலக திறப்பு விழா மற்றும் குழந்தைகள் தின விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு சிறப்பு அழைப்பாளராக, தொழிலதிபர் கவிஞர் அ.ஜ.இஷாக் பங்கேற்று அலுவலகத்தை திறந்து வைத்து, பள்ளி மாணவர்களுக்கு கற்றல் பொருட்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார். மேலும் இந்த நிகழ்ச்சியில் சோனிக் நிறுவனர் பி.லுசியன், தொண்டு நிறுவன மாவட்ட அமைப்பாளர் குமரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சங்கீதா குமார், ஊராட்சி செயலாளர் சக்திவேல் முருகன், ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல் பா.சீனிவாசன், எஸ்ஆர்எம் கணினி மைய நிர்வாகி எ.தேவா, ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் கதிரவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான சந்தேகங்களுக்கு சம்மந்தப்பட்ட தொகுதி தேர்தல் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொள்ளலாம்

மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தகவல்.

கள்ளக்குறிச்சி டிச 01

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் கடந்த 4ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இப்பணி தொடர்பாக கணக்கீட்டுப் படிவங்கள் வாக்காளர்களிடம் வழங்கப்பட்டு, பூர்த்தி செய்து மீள பெற்று ஙிலிளி கிறிறின் மூலம் பதிவேற்றம் செய்யும் பணிகள்



நடைபெற்று வருகிறது. இப்பணி நிறைவடையும் தருவாயில் உள்ளதால் பூர்த்தி செய்த படிவங்களை மீள ஒப்படைக்காத வாக்காளர்கள் 04.12.2025 வரை காத்திருக்காமல் உடன் சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் (BLO) ஒப்படைக்குமாறும், அவ்வாறு ஒப்படைக்காத வாக்காளர்களின் பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாது என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான சந்தேகங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டுப்பாட்டு அறை தொடர்பு 616001.1950, 77உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி தொடர்பு எண்.04149222255, 78ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி தொடர்பு எண்.04151235400, 79சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி தொடர்பு எண்.04151235329, 80கள்ளக்குறிச்சி (தனி) சட்டமன்றத் தொகுதி தொடர்பு எண்.04151222449 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு பொதுமக்கள் பயன்பெறலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

## திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு டிசம்பர் 2, 3, 4 ஆகிய தினங்களில் மதுக்கடைகளை மூட மாவட்ட ஆட்சியர் உத்தரவு

திருவண்ணாமலை மாநகராட்சி அமைந்துள்ள அண்ணாமலையார் திருக்கோயில் 2025 ஆம் ஆண்டு திருகார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு திருவண்ணாமலை நகரப் பகுதிக்கு அருகாமையில் இயங்கிவரும் அரசு சில்லறை மதுபானக் கடை எண்: 9481 (காமராஜர் சிலை அருகில்) கடை எண்: 9261 (மணலூர்பேட்டை சாலை) கடை எண்: 9490 (அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகில் ) மற்றும் சமுத்திரம் கிராம கடை எண். 9476 ஆகிய 4 டாஸ்மாக் கடைகளும்,

02.12.2025 நண்பகல் 12.00 மணி முதல் 04.12.2025 அன்று இரவு 10.00 வரை 3 நாட்கள் மற்றும் திருவண்ணாமலை நகரத்தின் உள்பகுதியில் இயங்கிவரும் மதுபானக்கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்கள், முன்னாள் இராணுவ வீரர்களுக்கான அங்காடி, உரிமம் பெற்ற மதுபானக்கடைகள் மற்றும் மதுக்கூடங்களுக்கு 02.12.2025 அன்று காலை 10.00 மணி முதல் 04.12.2025 அன்று இரவு 10.00 வரை 3 நாட்களுக்கு மதுவிற்பனை நடைபெறாமல் மூடிவைக்கவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் உத்தரவிட்டுள்ளார்.

## திருச்சி அருகே பாலதடுப்பில் கார் மோதி சென்னை இன்ஸ்பெக்டரின் கணவர், மருமகள் உயிரிழப்பு: மகன் படுகாயம்

துவரங்குறிச்சி: டிச.1–

திருச்சி அருகே பாலதடுப்பு கட்டையில் கார் மோதி விபத்துக்குள்ளானதில் சென்னை போலீஸ் இன்ஸ்பெக்டரின் கணவர், மருமகள் பலியாகினர். மகன் படுகாயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மதுரை மாவட்டம் நாகமலை புதுக்கோட்டை எல்ஜி நகரை சேர்ந்தவர் பேட்ரிக் (55). மதுரையில் உள்ள தனியார் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றி வந்தார். இவரது மனைவி சென்னை கொளத்தூர் காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றி வருகிறார்.

இவர்களது மகன் மெல்வின்(32). இன்ஜினியரான இவர், சென்னையில் உள்ள ஒரு ஐடி கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி ஆரோக்கிய பிரிசில்லா(26). நேற்றுமுன்தினம் பேட்ரிக், தனது மகன் மற்றும் மருமகளுடன் சென்னைக்கு சென்று விட்டு இரவு காரில் மதுரைக்கு திரும்பி கொண்டிருந்தார். காரை மகன் மெல்வின் ஓட்டினார்.

நேற்று காலை 9 மணி அளவில் திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சி அடுத்த கோசிக்குறிச்சி பிரிவு அருகே வந்த போது கட்டுப்பாட்டை இழந்த கார் அங்கிருந்த பாலத்தின் தடுப்பு கட்டையில் பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானது. இதில் காரின் முன்பகுதி அப்பளம் போல் நொறுங்கியது. இடிபாட்டுக்குள் சிக்கிய பேட்ரிக் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

படுகாயமடைந்த மெல்வின், ஆரோக்கிய பிரிசில்லா ஆகியோரை அப்பகுதியினர் மீட்டு துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை தனியார் மருத்துவமனைக்கு இருவரும் அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் சிகிச்சை பலனின்றி ஆரோக்கிய பிரிசில்லா இறந்தார். மெல்வினுக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விபத்து குறித்து துவரங்குறிச்சி போலீசார் வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## டிட்வா புயல் காரணமாக 9 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு நீடிப்பு!

சென்னை: டிச.1–

டிட்வா புயல் காரணமாக நாகை, காரைக்கால், புதுச்சேரி மற்றும் கடலூர் ஆகிய 4 துறைமுகங்களில் 5ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு நீட்டிக்கப்பட்டுள்ளது. சென்னை, எண்ணூர், பாம்பன், தூத்துக்குடி, காட்டுப்பள்ளி ஆகிய 5 துறைமுகங்களில் 4ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு நீட்டிக்கப்பட்டுள்ளது

### புதுச்சேரி தலைவர்களின் ஆசிக்குப் பின் கோவை வருகை:

## பாஜக முக்கிய புள்ளிகள் சந்திப்பு மற்றும் மருதமலை முருகன் கோயில் வழிபாடு சித்தார்த் அபிமன்யு பேட்டி!



கோவை:டிச.1

இந்து தர்ம பாதுகாப்பு பேரவையின் தமிழ்நாடு மாநில துணைத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள மருதமலையார் (எ) மருதமலை ஏ.கே.ஜி. சித்தார்த் அபிமன்யு, கோயம்புத்தூர் விமான நிலையத்தில் இன்று பத்திரிக்கையாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் தனது ஆன்மீக மற்றும் அரசியல் ரீதியான அடுத்தகட்ட நிகழ்வுகள் குறித்துப் பேசினார்.

சமீபத்தில் மாநிலத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்ற சித்தார்த் அபிமன்யு, புதுச்சேரிக்குச் சென்று அங்குள்ள முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்றார். குறிப்பாக, புதுச்சேரி முதலமைச்சர் மாண்புமிகு என். ரங்கசாமி அவர்கள், அமைச்சர்கள் லட்சுமி நாராயணன், ஜான்குமார் மற்றும் புதுச்சேரி பாஜக மாநிலத் தலைவர் ஆகியோரை நேரில் சந்தித்து தனது புதிய பதவிக்கான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

புதுச்சேரி பயணத்தை முடித்துக்கொண்டு கோவை திரும்பிய அவர், தனது அடுத்தகட்டமாகப் பிரசித்தி பெற்ற மருதமலை முருகன் திருக்கோயிலுக்குச் சென்று சிறப்பு வழிபாடு நடத்த இருப்பதாகவும், அங்கு முருகப் பெருமானை தரிசனம் செய்ய உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், கோயம்புத்தூர் மண்டலத்தில் உள்ள முக்கிய பாஜக பிரமுகர்கள் மற்றும் மூத்த தலைவர்களைச் சந்தித்து, இந்து தர்ம பாதுகாப்பு பேரவையின் பணிகள் குறித்தும், ஆன்மீகப் பணிகள் குறித்தும் விவாதிக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தச் சந்திப்பின் போது, சித்தார்த் அபிமன்யு அவர்களுடன் அவரது சகோதரர் லோகேஷ் அபிமன்யு உடனிருந்தார். முன்னதாக, கோயம்புத்தூர் விமான நிலையம் வந்தடைந்த அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

### டிட்வா புயல் எதிரொலி:

## பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்க என்.ஆர். காங்கிரஸ் மாநில செயலாளர் எஸ்.எஸ். அழகு வெளியிட்ட முக்கிய அறிவுரைகள்!

புதுச்சேரி:டிச.1–

டிட்வா புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பொது மக்கள் தங்களையும் தங்கள் குடும்பத்தாரையும் பாதுகாத்துக்கொள்ள மேற்கொள்ள வேண்டிய அவசர மற்றும் அவசியமான வழிமுறைகளை, அகில இந்திய என்.ஆர். காங்கிரஸ் மாநில செயலாளரும், கதிர்காமம் தொகுதி முக்கியப் பிரமுகருமான S.S. அழகு (எ) அழகானந்தம் அவர்கள் வெளியிட்டுள்ளார்.



இது குறித்து 'அழகு அறக்கட்டளை' சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில், பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

1. அரசு அறிவிப்புகளை மட்டும் நம்புங்கள்:

புயல் கரையை கடக்கும் வரை, இந்திய வானிலை ஆய்வு மையம் மற்றும் புதுச்சேரி பேரிடர் மேலாண்மை துறை மூலம் பகிரப்படும் அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை மட்டுமே பொது மக்கள் பின்பற்ற வேண்டும். சமூக வலைதளங்களில் பரவும் வதந்திகளை நம்பி அச்சப்பட வேண்டாம் என்றும், தேவையற்ற பதற்றத்தைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2. வீட்டுப் பாதுகாப்பு:

புயல் மற்றும் கனமழை நேரங்களில் வீட்டின் அனைத்து ஜன்னல்கள் மற்றும் கதவுகளைப் பாதுகாப்பாக மூடி வைக்க வேண்டும். நோய் தொற்றுகளைத் தவிர்க்க குடிநீரை நன்கு காய்ச்சி, ஆறவைத்த பின்னரே பருக வேண்டும்.

3. நீர்நிலை பகுதி மக்களுக்கு எச்சரிக்கை:

அணைக்கரை மற்றும் நீர்நிலைகளை ஒட்டி வசிப்பவர்கள் மிகவும் எச்சரிக்கையுடனும், விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும். தேவைப்பட்டால் அரசு ஏற்பாடு செய்துள்ள பாதுகாப்பு முகாம்களுக்குச் சென்று பாதுகாப்பாக தங்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. அவசர உதவி பெட்டகம் தயார் நிலை:

மின்சாரம் தடைபட வாய்ப்புள்ளதால், பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான கயிறு, மெழுகுவர்த்தி, டார்ச் லைட் (Torch light), தீப்பெட்டி ஆகியவற்றைத் கைவசம் வைத்திருக்க வேண்டும். மேலும், முதலுதவி பெட்டி, உலர்ந்த உணவு வகைகள், குடிநீர், அத்தியாவசிய மருந்துகள் மற்றும் குளுக்கோஸ் அடங்கிய 'அவசர உதவி பெட்டகத்தை' (Emergency Kit) ஒவ்வொரு வீட்டிலும் தயாராக வைத்துக்கொள்ள வேண்டும்.

5. ஆவணங்கள் பாதுகாப்பு:

வீட்டில் உள்ள விலை உயர்ந்த பொருட்கள் மற்றும் மிக முக்கிய ஆவணங்களை, மழை நீர் புகாத வண்ணம் பாதுகாப்பான உயரிடங்களில் பத்திரப்படுத்திக்கொள்ள வேண்டும்.

கதிர்காமம் தொகுதி மக்கள் மற்றும் புதுச்சேரி மக்கள் அனைவரும் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றி, புயல் பாதிப்பிலிருந்து பாதுகாப்பாக இருக்குமாறு திரு. S.S. அழகு அவர்கள் பொதுநலன் கருதி கேட்டுக்கொண்டுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம் ஜெ.என்.சாலை அரசு மருத்துவமனையில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள 24 மணி நேர தாய் சேய் நல கண்காணிப்பு மையத்தை திருவள்ளூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் தமிழ்நாடு மின்னணுவியல் கழக நிர்வாக இயக்குநருமான கே.பி.கார்த்திகேயன் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் ஆகியோர் நேரில் பார்வையிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தொடர்பான விவரங்களை கேட்டறிந்தனர். அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரி முதல்வர் ஜெ.ரேவதி, அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரி துணை முதல்வர் என்.திலகவதி, திருவள்ளூர் மாவட்ட சுகாதார அலுவலர் பிரியாராஜ், செவிலியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கோவை திருட்டு வழக்கில் குற்றவாளிகள் மீது துப்பாக்கி சூடு நடத்தி கைது செய்யப்பட்ட சம்பவம்

## மாநகர காவல் ஆணையர் பேட்டி..




கோவை, டிச,1–

கோவை.டிச 01 கவுண்டம்பாளையம் அரசு அடுக்குமாடி குடியிருப்பில் 13 வீடுகளில் பூட்டை உடைத்து 53 சவரன் தங்க நகைகள் மற்றும் ரூ.3 லட்சம் பணம் கொள்ளையடிக்கப்பட்ட வழக்கில், குற்றவாளிகள் மூவரை துப்பாக்கி சூடு நடத்தி போலீசார் பிடித்துள்ளனர்..

இது குறித்து கோவை மாநகர காவல் ஆணையர் சரவண சுந்தர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர்,

உத்தரபிரதேசத்தை சேர்ந்த இர்பான், கல்லு, ஆசிப் ஆகிய மூவர் குற்றத்தில் தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் குனியமுத்தூர் பகுதியில் தங்கி இருந்தது விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இன்று அதிகாலை குளத்துப் பாளையம் அருகே இவர்களை பிடிக்க முயன்றபோது, குற்றவாளிகள் போலீசாரை தாக்க முயன்றதால் தற்காப்பு காரணமாக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாக ஆணையர் கூறினார்.

துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்த மூவரும் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். வழக்கில் இதுவரை 42 சவரன் தங்க நகைகள், 500 கிராம் வெள்ளி, ரூ.1.5 லட்சம் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தீபாவளிக்கு முன்பு வீடு வாடகைக்கு எடுத்து தங்கி, அலுமினிய பாத்திர வியாபாரம் மற்றும் துணி விற்பனை பெயரில் கோவையில் குடியிருந்தது முதற்கட்ட விசாரணையில் தெரிகிறது. பூட்டிய வீட்டுகளில் சுமார் 3 மணி நேரத்திற்குள் கொள்ளை நடத்தியதாக போலீசார் தெரிவித்தனர்.

இந்த வழக்கில் தொடர்புடையதாக 12 பேரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. இது பவாரியா கும்பல் செயல்பாடில் இடம்பெற்றதா என்பது குறித்து தற்போது உறுதி செய்ய முடியாது என்றும், ஒரு ஆட்டோ ஓட்டுநர் இதில் சம்பந்தப்பட்டாரா என்பது விசாரணையில் மட்டுமே தெளிவாகும் என்றும் ஆணையர் கூறினார்.

சூழ்நிலை காரணமாகவே துப்பாக்கி பயன்படுத் தப்பட்டதாகவும், தற்காப்புக்காக அது அவசியமான நிலை ஏற்பட்டதாகவும் காவல் ஆணையர் சரவண சுந்தர் விளக்கம் அளித்தார்.

# அன்புமணியை சிறையில் அடைக்க வேண்டும்.

## சேலம் பாமக எம்எல்ஏ அருள் ஆவேசம்.




சேலம். டிச.1–

அன்புமணி மீது நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்து சிறையில் அடைக்க வேண்டும் என சேலம் மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அருள் கூறியுள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் கடலூர் மாவட்ட ஒருங்கிணைந்த பொதுக்குழு கூட்டம் பாமக நிறுவனர் ராமதாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய சேலம் மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அருள், 'குருச்சேத்திர போர் போல் ஒரு தூசுக்கும், இமயமலைக்கும் தற்போது போர் நடைபெற்று வருகிறது. ராமதாஸுடன் மோதுவதற்காக பல சதிகள் செய்து, துரோகங்களை இழைத்து பல கோடி ரூபாயை செலவு செய்து கொண்டிருக்கின்றனர்.

பெற்றவர்களையே மதிக்காத யாருமே தலைவராக இருந்ததில்லை. மிகப் பெரிய இயக்கத்தை உருவாக்கி தலைவராகிய ராமதாஸுக்கு அன்புமணி செய்த துரோகம் ஒன்றா? இரண்டா? நீதிமன்றத்திற்கு நிகரான தேர்தல் ஆணையத்தில் அன்புமணி பொய் சொல்லி இருக்கிறார். 2023ல் தான் பாமகவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்ற தகவலை கொடுத்திருக்கிறார். இது அப்பட்டமான பொய் ஆகும்.

தேர்தல் ஆணையத்தை ஏமாற்றிய அன்புமணி மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க வேண்டும். நீதிமன்றத்தை அவமதித்து, பொய் செய்தி தெரிவித்த அன்புமணியை சிறையில் அடைக்க வேண்டும்.

போலி பத்திரம் தயாரித்து நிலத்தை அபகரிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். 46 ஆண்டு காலம் உழைத்து உருவாக்கிய கட்சியை திருடிவிட்டனர். இந்த அநீதிக்கு நிச்சயம் நீதி கிடைக்கும், மாம்பழம் சின்னம் மருத்துவர் ராமதாஸ் உடையது என நீதிமன்றம் விரைவில் சொல்லும்' என கூறினார்.

கடந்த சில மாதங்களாக பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸுக்கும், அவரது மகன் அன்புமணிக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது. 'தமிழக மக்கள் உரிமை மீட்பு' பயணம் என்ற பேரில் அன்புமணி ராமதாஸ் தமிழ்நாடு முழுவதும் 108 நாட்கள் நடைபயணம் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் பாமகவுக்கு தானே தலைவர் என்றும், தங்களுடைய தரப்புக்கு கட்சியின் சின்னமான 'மாம்பழம்' ஒதுக்க வேண்டும் என்றும், இந்திய தேர்தல் ஆணையத்துக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் கடிதம் சமீபத்தில் ஒரு கடிதம் அனுப்பி இருந்தார். இதனையடுத்து ராமதாஸ் கடிதத்துக்கு பதில் அளித்துள்ள தேர்தல் ஆணையம், அன்புமணி தான் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் என அறிவித்துள்ளது.

# திருவள்ளூர் மாவட்டத்தில் கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்து வீடு வீடாக சென்று திரும்ப பெறுவது தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் ஆய்வு



திருவள்ளூர் டிச 01 :

திருவள்ளூர் மாவட்டம், மற்றும் வட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேப்பம்பட்டு தமிழ்நாடு வீட்டு வசதி குடியிருப்புதிருமழிசை வெங்கடேஸ்வரா நகர் பகுதியில் விநியோகிக்கப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்து வீடு வீடாக சென்று திரும்ப பெறுவது தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலைமேற்பார்வையாளர்களுடன் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை துரிதமாக முடிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

சென்னை பெருநகர மாநகராட்சி,வளசரவாக்கம் மண்டலம் மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தனியார் அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் விநியோகிக்கப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்து வீடு வீடாக சென்று திரும்ப பெறுவது தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை மேற்பார்வையாளர்களுடன் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை துரிதமாக முடிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இதில் உதவி இயக்குநர் (பயிற்சி) பி.மோகன், வாக்காளர் பதிவு அலுவலரும் உதவி ஆணையருமான (கலால்) கணேசன்,உதவி வாக்காளர் பதிவு அலுவலரும் பூந்தமல்லி வட்டாட்சியருமான உதயம், வாக்காளர் பதிவு அலுவலரும் மத்திய சென்னை வருவாய் கோட்டாட்சியருமான எம்.சதீஷ் குமார், உதவி வாக்காளர் பதிவு அலுவலரும் மதுரவாயல் வட்டாட்சியருமான ஜி.ஜெயக்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற, தீவிர சிறப்பு வாக்காளர் திருத்தம் பணி முகாமை, ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி நேரில் ஆய்வு செய்தார். வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன் மற்றும் தேர்தல் பிரிவு அலுவலர்கள் உள்ளனர்.

# சபரிமலை தங்கம் திருட்டு முன்னாள் திருவாபரணம் ஆணையரின் ஜாமீன் மனு தள்ளுபடி

திருவனந்தபுரம்: டிச.1–

சபரிமலை தங்கம் திருட்டு வழக்கில் திருவிதாங்கூர் தேவசம் போர்டு முன்னாள் அதிகாரிகளான முராரி பாபு, பைஜு, சுதீஷ்குமார் மற்றும் முன்னாள் தேவசம் போர்டு தலைவர்களான பத்மகுமார், வாசு உள்பட 6 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பைஜு கடந்த 2019ம் ஆண்டு திருவாபரணம் ஆணையராக பணியில் இருந்தார்.

ஆனால் அப்போது தங்கத்தகடுகளை சென்னைக்கு கொண்டு சென்ற போது இவர் எந்தவித பரிசோதனையும் நடத்தவில்லை. இந்நிலையில் பைஜு முன்ஜாமீன் கோரி கொல்லம் விஜிலன்ஸ் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. இதற்கிடையே நேற்று இவரை ஒருநாள் காவலில் வைத்து விசாரிக்க போலீசுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

## மணிமுக்தா ஆற்றின் கரையோர பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என நீர்வளத்துறை சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கள்ளக்குறிச்சி, டிச.1–

கள்ளக்குறிச்சி மாவட்டம், மணிமுக்தா அணையில் (29.11.2025 பிற்பகல் 4.00 மணிக்கு நீர்மட்டம் 25.00 அடி ஆகவும், நீர்வரத்து வினாடிக்கு 100 கனஅடி (cusecs) ஆகவும் பதிவாகியுள்ளது. அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் டிட்வா புயலின் காரணமாக மழை பெய்து வருவதால், பழுதடைந்த பழைய கதவுகளின் தாங்கும் திறனை கருத்தில் கொண்டும், அணை மற்றும் பொது மக்களின் பாதுகாப்பு கருதி வினாடிக்கு 100 கனஅடி அளவிற்கு உபரிநீர் வெளியேற்றப்படும்.

மேலும், நீர்வரத்து நிலைமையைப் பொருத்து நீர் வெளியேற்ற அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளது. இதனால் மணிமுக்தா ஆற்றின் கரையோர பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருந்து, தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீர்வளத்துறை சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மணிமுக்தா ஆற்றின் கரையோரம் வசிக்கும் பொதுமக்கள் ஆற்றில்இறங்கவோ/ குளிக்கவோ/ துணி துவைக்கவோ/ ஆடு, மாடுகளை குளிக்கவைக்கவோ/ ஆற்றை கடக்கவோ கூடாது. மேலும் ஆறுகளின் ஓரத்தில் செல்பி எடுத்தல் உள்ளிட்ட தேவையற்ற செயல்களையும் முற்றாக தவிர்க்க வேண்டும் என நீர்வளத்துறை கள்ளக்குறிச்சி வெள்ளாறு வடிநில உப கோட்ட உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

# முதல்வரை மரியாதை நிமித்தமாக சந்தித்த மண்டல குழு தலைவர்



ஈரோட்டிற்கு அரசு விழாவில் கலந்து கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, திட்டப் பணிகளை துவக்கி வைக்க ஈரோடு வருகை புரிந்து இருந்த, தமிழக முதல்வர் மு க ஸ்டாலினை, ஈரோடு தெற்கு மாவட்ட திமுக பொருளாளர், 1 வது மண்டல குழு தலைவர், சேலம் கோட்ட ரயில்வே ஆலோசனை குழு உறுப்பினர் பி. கே . பழனிசாமி மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து புத்தகம் பரிசளித்து உரையாடினார். அருகில் அமைச்சர் சு. முத்துசாமி, ஈரோடு எம்பி கே இ பிரகாஷ், கிழக்குத் தொகுதி எம்எல்ஏ வி சி சந்திரகுமார் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

# செஞ்சி டேனி கல்வியியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா




செஞ்சி ,டிச.1–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த காரியமங்கலத்தில் உள்ள டேனி கல்வியல் கல்லூரியில் 2019, 2020,2021 ஆண்டுக்கானபட்டமளிப்பு விழா டேனி கல்வியில் கல்லூரியில் உள்ள பஸ்கரன் நினைவு பல்நோக்கரங்கத்தில் நடைபெற்றது.

டேனிகல்வி குழுமத்தின் தலைவர் ஜாஸ்பர் தலைமை தாங்கினார்

செயலாளர் டாக்டர் ஸ்டெல்லா பாக்கியவதி முன்னிலை வகித்தார்

விழாவில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், எம்எல்ஏ, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியல் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் ராஜசேகரன், ஆகியோர் கலந்து கொண்டு 173 மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், பழங்குடி இருளர் அமைப்பு நிர்வாகி சுடரொளி சுந்தரம், வழக்கறிஞர் வெற்றிச்செல்வன், மேல் தளவாய் ஊராட்சி மன்ற தலைவர் கலைச்செல்வி பாலச்சந்தர், காரியமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் பாலு,ல்வியாளர் டாக்டர் சக்திவேல்,கல்லூரியின் முதல்வர் மகாலட்சுமி பேராசிரியர்கள் பரிதிஓவியா, ஈஸ்வரி, சரவணன், நாகராஜ், குமாரசாமி, ஞானவேல், பாலு, ரமேஷ் குமார், மரியசெல்வம், கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர் சாமுவேல் நன்றி கூறினர்.

# இந்தியாவின் முன்மாதிரி முதல்வராக செயல்பட்டு வரும் தமிழக முதல்வர் அனைவரின் கோரிக்கைளையும் நிறைவேற்றி வருகிறார்



கோவை டிச01

கோவையில் நடைபெற்ற ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்க கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழக சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகம்மது ரபி பேச்சு!!

கோவையில் ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கத்தின் 3 ஆம் ஆண்டு துவக்க விழா மற்றும் பேரவை கூட்டம் போத்தனூர் பகுதியில் உள்ள ராசி அரங்கில் நடைபெற்றது..

கோவை மாநகர தெற்கு கிளை தலைவர் இராமதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பல்வேறு அமைப்பினர், அரசு அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்..

விழாவின் ஒரு பகுதியாக மருத்துவ முகாம் நடைபெற்றது..

நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழக சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகம்மது ரபி மருத்துவ முகாமை துவக்கி வைத்தார்..

தொடர்ந்து பேசிய அவர்,இந்தியாவிலேயே முன்மாதிரி முதல்வராக தமிழக முதல்வர் சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறிய அவர்,தமிழகத்தில் மதங்களை கடந்து மனிதநேய ஆட்சி நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.. அதிகாரிகளாக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்ற பிறகும், ஆக்கத்துடன் செயல்பட்டு வரும் ஓய்வு பெற்ற அலுவலர்களை உள்ளபடியே தாம் பாராட்டுவதாக கூறினார்..

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் 70 வயதை அடையும் ஓய்வு பெற்றவர்களுக்கு 10 சதவீதம் கூடுதல் ஓய்வூதியம் வழங்க வேண்டும்,ஒன்றிய அரசு ஓய்வூதியர்கள் பெறும் திருத்தப்பட்ட ஓய்வூதியத்தை தமிழக அரசு ஓய்வுதியர்களும் பெற வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன...

# வெம்பாக்கத்தில் பயணிகள் நிழற்குடை: எம்பி திறந்து வைத்தார்



திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அடுத்த வெம்பாக்கத்தில் ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணிவேந்தன் தனது தொகுதி மேம்பாட்டு நிதியில் செய்யார் சட்டமன்ற தொகுதியான வெம்பாக்கம் அரசு மருத்துவமனை எதிரில் புதிதாக அமைக்கப்பட்ட நிழற்குடையை திறந்து வைத்தார். மேலும் துணை முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஓ.ஜோதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரும் பங்கேற்றனர்.

## கோயம்புத்தூரில் உள்ள இந்துஸ்தான் தொழில்நுட்பக் கல்லூரியின் 14வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.




கோவை, டிச.1–

கோயம்புத்தூரில் உள்ள இந்துஸ்தான் தொழில்நுட்பக் கல்லூரியின் (HITECH) 14வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது. முதல்வர் டாக்டர் சி. நடராஜன் அவர்கள் கூட்டத்தினரை வரவேற்று பட்டமளிப்பு நாள் அறிக்கையை வழங்கினார். கல்லூரி முதல்வர் மாணவர்கள் சமூக அர்ப்பணிப்புடன் இருக்கவும், சாத்தியமான அனைத்து தளங்களிலும் நேர்மறையாக வளரவும் வலியுறுத்தினார். நீங்கள் உங்கள் எதிர்காலத்தின் ஆசிரியர்கள். சவால்கள் இருக்கும், ஆம் ஆனால் நீங்கள் முன்னேறுவதற்கு வாய்ப்புகள் காத்திருக்கின்றன. நீங்கள் கற்றுக்கொண்டவற்றில் நம்பிக்கை வையுங்கள், உங்களை நம்பும் மக்கள் மீது நம்பிக்கை வையுங்கள், உங்களை நம்புங்கள்.

இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் திருமதி டி.ஆர். சரசுவதி விழாவிற்குத் தலைமை தாங்கி தலைமையுரை ஆற்றினார். நிர்வாக அறங்காவலர் திருமதி டி.ஆர். சரசுவதி, இளம் பட்டதாரிகள் தங்களுக்கு மட்டுமல்ல, அவர்களுடன் தொடர்புடைய அனைவருக்கும் சிறந்த மற்றும் பிரகாசமான எதிர்காலத்தை வடிவமைப்பதில் வகிக்கும் முக்கிய பங்கை நினைவு கூர்ந்தார். அவர்கள் ஒவ்வொருவரும் சமூகத்திற்கு முழுமையாக அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கும் பொறுப்புள்ள தலைவர்களாக வளர வேண்டும் என்று தனது மனமார்ந்த விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

ஒசூரில் உள்ள அசோக் லேலேண்டின் ஊழியர் உறவுத் தலைவர் வேலுமணி ஆர்.என். தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். பட்டமளிப்பு விழா உரையை நிகழ்த்தி, மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்கள் மற்றும் விருதுகளை வழங்கினார். தலைமை விருந்தினர் திரு. வேலுமணி ஆர்.என்., தரவரிசை பெற்றவர்களுக்கும், பட்டம் பெற்றவர்களுக்கும் மிகவும் வெற்றிகரமான வாழ்க்கையை வாழ்த்தினார். வேகமாக நகரும் உலகில் மாணவர்கள் தங்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பட்டதாரிகள் நிஜ உலகில் சவால்களை எதிர்கொள்ள உதவும் வகையில், நான்கு ணி பெறுவதன் அவசியத்தை அவர் விரிவாகக் கூறினார்: கல்வி, உங்களை நீங்களே தயார்படுத்திக் கொள்ளுங்கள், நலன் விரும்பிகளிடமிருந்து சவால்கள் மற்றும் ஊக்கத்தை எதிர்பார்க்கலாம்.

ஹிந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் மற்றும் செயலாளர் டாக்டர் கே. பிரியாவும் மேடையில் கலந்து கொண்டார்.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த சுமார் 560 மாணவர்கள் பட்டம் பெற்றனர். அவர்களில் இருபது பேர் பல்கலைக்கழக தரவரிசை பெற்றவர்கள். இறுதியாக, விழா தேசிய கீதத்துடன் முடிந்தது.



உயர் மின் கோபுர துவக்க விழா திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் சுப்ராயன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 22 லட்சம் மதிப்பீட்டில் நான்கு உயர் மின் கோபுர விளக்கினை திறந்து வைத்தார் இந்த நிகழ்வில் துணை மேயர் பாலசுப்ரமணியம் .2 வது மண்டல தலைவர் தம்பி ஆர் கோவிந்தராஜ் மாமன்ற உறுப்பினர் திருமதி கவிதா விஜயகுமார்.அதிமுக 7.வார்டு செயலாளர் விஜயகுமார்.திமுக பகுதி கழக அவைத் தலைவர் தயாளன்.7 வார்டு செயலாளர் ஆர் ஆர் செல்வராஜ்.மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மண்டல பொறுப்பாளர் சசி. மாநகராட்சி ஒப்பந்ததாரர் சிட்டி பழனிச்சாமி.உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்

## பணி நிறைவு பாராட்டு விழா ஊராட்சி மன்ற தலைவர் அர்ச்சனா காமராஜன் தலைமையில் நடைபெற்றது.



சங்கராபுரம் டிச 01

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் ஒன்றியம் ரங்கப்பனூர் ஊராட்சியில் 25 ஆண்டு காலமாக மேல்நிலை நீர் தேக்க தொட்டி இயக்குனராக வெள்ளி கண்ணன் பணிபுரிந்து வந்தார். அவர் வயது மூப்பின் காரணமாக பணி ஓய்வு பெற்றார். அவருக்கு இன்று ரங்கப்பனூர் ஊராட்சியின் சார்பாக ஊராட்சி மன்ற தலைவர் அர்ச்சனா காமராஜன் தலைமையில் பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் அவருக்கு சந்தன மாலை அணிவித்தும், பொன்னாடை போர்த்தியும், புதிய சீருடை வழங்கியும், கௌரவிக்கப்பட்டது. அவரை ஊராட்சி மன்ற தலைவர் அர்ச்சனா காமராஜன் அவரது சொந்த வாகனத்தில் அவரையும் அவரது துணைவியாரையும் அழைத்துக் கொண்டு பணி ஓய்வின் கடைசி நாளான இன்று அவரது இல்லத்திற்கு சென்று விட்டு விட்டு வந்தனர். விழாவில் ஊராட்சி மன்ற தலைவர் அர்ச்சனா காமராஜன் வாழ்த்துரை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் விருத்தாம்பாள் பச்சையாபிள்ளை மற்றும் வார்டு உறுப்பினர்கள் மீனா துரை ,இளம்வழுதி, ஸ்டெல்லா வேலு ,தமிழ் ரகு ,ரூபாவதி புகழேந்தி, ஏழுமலை, மாசிலாமணி ,ராஜா ஆகியோர் கலந்து கொண்டு கௌரவித்து வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அவரது உறவினர்கள் திரளான பொதுமக்கள் மற்றும் அவருடன் பணிபுரிந்த ஊராட்சி மன்ற பணியாளர்கள், மற்றும் அலுவலக கணினி உதவியாளர் மற்றும் பணிதள பொறுப்பாளர்கள், தூய்மை பணியாளர்கள், தூய்மை காவலர் அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். விழாவின் முடிவில் கேக் வெட்டியும் தேனீர் இனிப்பு வழங்கப்பட்டது. இறுதியாக ஊராட்சி செயலர் திருமால்வளவன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## மதுரவாயல், அம்பத்தூர் மற்றும் ஆவடி ஆகிய தொகுதியில் விநியோகிக்கப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்து திரும்ப பெறுவது தொடர்பாக கலந்தாலோசனை கூட்டம்

திருவள்ளூர் டிச 01 :

சென்னை பெருநகர மாநகராட்சி மற்றும் திருள்ளூர் மாவட்டம் ஆகிய பகுதிகளின் மதுரவாயல், அம்பத்தூர் மற்றும் ஆவடி ஆகிய சட்டமன்ற தொகுதிக்குப் பட்ட மண்டல மற்றும் மாநகராட்சி அலுவலகங்களில் விநியோகிக்கப் பட்ட கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்து திரும்ப பெறுவது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலைய மேற்பார்யாளர்களுடன் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் தலைமையில் கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது அவர் கூறியதாவது :



தேர்தல் ஆணையம் சார்பில் சிறப்பு தீவிர திருத்தம் 2025 தொடங்கி நடைபெற்று வருகிறது டிசம்பர் 4 வரை படிவங்களை வீடு வீடாக சென்று அங்கு இருக்கிற வாக்காளர் நிலை அலுவலர்களும், வாக்காளர் நிலையை மேற்பார்வை யாளர்களும் சென்று கொடுத்து அவர்களிடம் இருந்து படிவங்களை திரும்ப பெற்று, கணினி மயமாக்கல் செய்து வருகின்றனர், வரைவு வாக்களார் பட்டியலை டிசம்பர் 9 தேதி மாவட்டத்தில் இருக்கிற 10 தொகுதிகளுக்கும் வெளியிடப்படவுள்ளது. அதன்படி, இன்று அம்பத்தூர் தொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரநிதிகளுடன் கலந்துரையாடி அவர்களுடைய கருத்துகள் மற்றும் கோரிக்கைகளை அவர்களிடம் கேட்டறிந்து அரசியல் கட்சிகள என்னென்ன வந்து விஷயங்கள் எதிர் பார்கிறோம் தகவல் களையும் கருத்துகளையும் தெரிவித்தனர்

அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி பொறுத்தவரையில் மொத்த வாக்களார்கள் 374,000, வாக்காளர்களில் 1,69,000 விநியோகம் செய்யப்பட்டு சராசரியாக இதுவரை 45.32 சதவீதம் முடிவடைந்துள்ளது. 4 அல்லது 5 நாட்களில் மற்ற நிலுவைவுள்ள படிவங்களை முடிவடைய செய்ய வேண்டும். அந்த படிவங்களில் உங்களுக்கு சந்தேகங்கள் இருக்கிறது என்றால் அங்கு இருக்கின்ற தன்னார் வலர்கள் வாயிலாக பூர்த்தி பண்றதுக்கான அனைத்து நடவடிக்கைகளையும் தேர்தல் ஆணையம் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் சார்பில் எடுத்திருக்கிறோம்.

அம்பத்தூர் வாக்காளர் பதிவு அலுவலர், மண்டல அலுவலர் அம்பத்தூர் மண்டலம் மற்றும் அவங்களுக்கு கீழ இருக்குற அனைத்து அலுவலர்களும் அப்பணிகளை மேற் கொண்டு வருகின்றனர் படிவங்களில் ஏதாவது பிரச்சனை இருந்தால் நீங்கள் நேரடியாக அதிகாரிகளை சந்திக்கலாம்.இதுவரை திருவள்ளூர் மாவட்டத்தில் 10 தொகுதிகளை 54 சதவீதம் முடித்திருக் கிறோம். மொத்தம் 36 லட்சம் வாக்காளர்கள் அதில் ஏறக்குறைய 20 லட்சம் வாக்காளர்களின் படிவங்களை திரும்பி பெற்றிருக்கும் மற்ற பணிகளும் தொடர்ந்த நடைபெறுகிறது. திருத்தணியில் 70% முடிந்து இருக்கிறது மதுரவாயில் 41 சதவீதம் முடிந்திருக்கிறது இன்னும் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் முடிந்துவிடும். என மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் தெரிவித்தார்.

இதில் ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, மாநகராட்சி பொறியாளர் பி.வி.ரவிச்சந்திரன், வாக்காளர் பதிவு அலுவலரும் துணை ஆணையருமான மாரிச்செல்வி, உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் ஜெ.இந்திராணி (ஆவடி மாநகராட்சி வருவாய் அலுவலர்), இ.ஜீவிதா (திருநின்றவூர் நகராட்சி ஆணையர்), வி.ராமர் (திருவேற்காடு நகராட்சி ஆணையர்), வட்டாட்சியர் டி.கண்ணன் (ஆவடி) வாக்காளர் பதிவு அலுவலர் / உதவி ஆணையர் (ம) மண்டல அலுவலர் அர்.எ.பிரபாகர், உதவி வாக்காளர் பதிவு அலுவலரும் அம்பத்தூர் வட்டாட்சியருமான பி.விக்ரம், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் / உதவி வருவாய் அலுவலர்கள் கிருபாகரன் லட்சுமண குமார், வாக்காளர் பதிவு அலுவலரும் மத்திய சென்னை வருவாய் கோட்டாட்சியருமான எம்.சதீஷ் குமார், உதவி வாக்காளர் பதிவு அலுவலரும் மதுரவாயல் வட்டாட்சியருமான ஜி.ஜெயக்குமார் பல்வேறு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## செங்கோட்டையன் விவகாரம் பாஜவின் சித்து விளையாட்டு: திருமாவளவன் சந்தேகம்

கோவை: டிச.1–

கோவை விமான நிலையத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: செங்கோட்டையன் அதிமுகவின் ஒரு மூத்த தலைவர். அவர் அதிமுகவை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டு இருப்பது அந்த கட்சிக்கு உகந்தது அல்ல. அவர் தவெகவை தேர்வு செய்தது அவருடைய முடிவு. அதில் கருத்து சொல்ல விரும்பவில்லை.

ஆனால், அதிமுகவை இப்படி ஒரு நெருக்கடிக்கு தள்ளியதில் பாஜவிற்கு ஒரு பங்கு இருப்பதாக நான் கருதுகிறேன். ஏற்கனவே, செங்கோட்டையன் டெல்லிக்குச் சென்று வந்த பிறகு என்னை அழைத்தது அமித்ஷாதான் என்று கூறியிருக்கிறார். அமித்ஷா மற்றும் பாஜ தலைவர்களுடன் நெருக்கமாக இருந்த ஒருவர் அதிமுகவில் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றால், அதிமுகவும் பாஜவும் கூட்டணி கட்சிகளாக இருக்கக்கூடிய சூழலில் இது எந்த அடிப்படையில் நிகழ்ந்தது என்ற கேள்வி எழுகிறது.

அதிமுகவில் இப்படிப்பட்ட ஒரு பலவீனம் ஏற்படுவதை பாஜ ஏன் வேடிக்கை பார்க்கிறது? எனவே, செங்கோட்டையன் அதிமுகவிலிருந்து வெளியேறியதில் எடப்பாடி பழனிசாமிக்கும், செங்கோட்டையனுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்னை தான் காரணமா? அல்லது பாஜவின் சித்து விளையாட்டுகளில் இதுவும் ஒன்றா? என்ற சந்தேகம் இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## 2 போலீசார் சஸ்பெண்ட்

விருதுநகர்: டிச.1–

வத்திராயிருப்பு அருகே நீதிமன்றம் சென்று திரும்பும் வழியில் கைதி தப்பியோடிய சம்பவம் தொடர்பாக 2 போலீசார் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே கோட்டையூரைச் சேர்ந்தவர் செந்தமிழ்ச்செல்வன்(29). இவரை ஒரு வழக்கில் போலீசார் கைது செய்து, ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் ஆஜப்படுத்தினர்.

பின்னர் திரும்பி வரும் வழியில் அழகாபுரி பகுதியில் போலீஸ் வாகனத்தை நிறுத்திவிட்டு தலைமை காவலர் மதனசாமி, போலீஸ்காரர் லிங்கராஜ் ஆகியோர் கைதி செந்தமிழ்ச்செல்வனுடன் ஓட்டலில் சாப்பிட சென்றனர். அப்போது கைதி செந்தமிழ்ச்செல்வன் போலீசாரிடம் இருந்து தப்பியோடிவிட்டார். இதையடுத்து 2 போலீசாரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

## விழுப்புரம் மாவட்டம். டிட்வா புயல் பேரிடர் மேலாண்மை பணியில் இந்தியன் ரெட்கிராஸ சொசைட்டி மாநில பேரிடர் மேலாண்மை குழ தன்னார்வலர் முனைவர். ம. பாபு செல்வதுரை தன்னார்வ களப்பணி:



விழுப்புரம், டிச.1–

விழுப்புரம் மாவட்டம் . திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம் . அரசூர் அருகிலுள்ள காரப்பட்டு கிராமத்திற்கு செல்லும் ஆற்றுத் தலைப்பாலம் டிட்வா புயல் வெள்ளத்தால் திடீர் என உடைந்தது. இதனை அறிந்த காவல் துறையுடன் இணைந்து. காலை 8.00 மணி முதல் பாதுகாப்பு பணியில் தன்னார்வளராக இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி மாநில பேரிடர் மேலாண்மைக் குழுவின் தன்னார் வலரும், மாவட்ட இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி நிர்வாகக் குழு உறுப்பினரும் – முட்டத்துார். ஓய்க்காப் மேனிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியரும் விழுப்புரம் கல்வி மாவட்டம். ஜூனியர் ரெட் கிராஸ் அமைப்பின் மாவட்டக் கன்வீனர் முனைவர் ம. பாபு செல்வதுரை அவர்கள் காரபட்டு கிராமத்தில் பேரிடர் மீட்டிப் பணியில் தன்னார்வலராக களப்பணியாற்றினார்.

மேலும் நிர்வாகத் துறை, நெடுஞ் சாலைத்துறை அலுவலர்கள் மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். மழையிலும் பொதுமக்களுக்கு உதவிடும் நோக்கில் தன்னார்வ களப்பணியாற்றிய ஆசிரியர் முனைவர். ம.பாபு செல்வதுரை அவர்களை. அனைவரும் பாராட்டினர்.

## உதயநிதி பிறந்தநாள் பள்ளி குழந்தைகளுக்கு உணவு வழங்கல்



தமிழ்நாடு துணை முதலமைச்சர் ரும், திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட 24 வது வட்டத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியில், பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ள நல்விருந்து 300 என்ற அறிவுறுத்தலின்படி, 300 மாணவ மாணவிகளுக்கு அறுசுவை உணவை, ஈரோடு தெற்கு மாவட்ட பொருளாளர், ஒன்னாவது 1 வது மண்டல குழு தலைவர், சேலம் ரயில்வே கோட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் பி. கே . பழனிசாமி உணவு வழங்கினார். பள்ளி மாணவ மாணவிகள் பெற்றோர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421